**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102056

1. District : சிவகங்கை
மாவட்டம்
PS: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
காவல்நிலையம்
Year: 2019
ஆண்டு
FIR No.: 01/2019
மு.த.அ. எண்
Date: 28.06.2019
நாள்

2. (i) Act சட்டம்: P.C. Act (Amendment Act 2018) — Sections பிரிவுகள்: 7 of P.C. Amendment Act 2013
(ii) Act சட்டம்: Cr.P.C. — Sections பிரிவுகள்: 102 Cr.P.C
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 19.02.2019
Date from : நாள் முதல் 17.00 hrs
Date to : நாள் வரை to 20.00 hrs
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல்
Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.02.2019
Time : நேரம்

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 28.06.2019 VOL - I
Time : நேரம் 14.00 hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 1½ கி.மீ கிழக்கே,
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி — சிவகங்கை மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், சிவகங்கை.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : பா. செந்தில்வேலு
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : V. கணேசன்
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 02.04.1966
(d) Nationality : நாட்டினம்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்
(g) Address : முகவரி சிவகங்கை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. திருமதி. R. காமியம், உதவி இயக்குநர், (வே.பொ.) துணை இயக்குநர், 2). திரு. கற்பக விநாயகம் வரைவாளர் நிலை III, 3). திரு. கோபாலன் வரைவாளர் நிலை III, 4). திரு. முத்துராமலிங்கம், அளவர்/உதவி வரைவாளர், 5. திரு. விஜயேந்திரன் கண்காணிப்பாளர், 6). திருமதி. மாரீஸ்வரி ஜோதி தட்டச்சர், 7) திருமதி. அன்னாதேவி, அலுவலக உதவியாளர், சிவகங்கை மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், சிவகங்கை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சிவகங்கை மாவட்ட முதன்மை நீதித்துறை குற்றவியல் நடுவர் / சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம் முன்பாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 28.06.2019ம் தேதி 13.00 மணிக்கு நான் அலுவலகத்தில் இருந்தபோது வாதியான சிவகங்கை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரான சிவகங்கை நகர நிலவரித்திட்ட தனி வட்டாட்சியர் திரு.G.செந்தில்வேலு அலுவலகத்தில் ஆஜராகி 19.02.2019ம் தேதி சிவகங்கை மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்தில் நடத்திய திடீர் இணை சோதனை சம்மந்தமாக கொடுத்த எழுத்து மூலமான புகாரைப்பெற்றேன். புகார் விபரம் பின்வருமாறு, அனுப்புநர் :G.செந்தில்வேலு, துணை ஆய்வுக்குழு அலுவலர், சிவகங்கை மாவட்டம், பெறுநர் : காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சிவகங்கை, ந.க.A1/25/2019, நாள். 28.06.2019, ஐயா, பொருள் : இணை திடீர் சோதனை – சிவகங்கை மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்தில் 19.02.2019 அன்று திடீர் இணை சோதனை நடத்தப்பட்டது – மேல் நடவடிக்கை எடுக்க கோருவது தொடர்பாக. பார்வை : எனது செயல்முறை நடவடிக்கைகள், நாள்.19.02.2019. கடந்த 19.02.2019ம் தேதி சிவகங்கை மாவட்டம், துணை ஆய்வுக்குழு அலுவலராக என்னை அழைத்தன் பேரில், நான்

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed R.M.Chandran Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………… on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ……………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறைபீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
ஜி. செந்தில்வேலு
28/6/2019

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
28.06.2019 at 16.00 hrs

Name: பெயர் Unnikrishnan. S
Rank: நிலை DSP, VLAC No. எண் ………
Ramanathapuram, I/c. Sivagangai
28/6/19

மாலை 4 மணியளவில் தங்கள் அலுவலகம் வந்து தங்களை சந்தித்தேன். சிவகங்கை மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்தில் கட்டிட வரைபட அனுமதி, மனைப்பிரிவு ஒப்புதல் மற்றும் அனுமதியற்ற மனைப்பிரிவை வரன்முறைப்படுத்துதல் சம்மந்தமாக அந்த அலுவலகத்திற்கு வரும் பொறியாளர்கள், நில விற்பனையாளர்கள், இடைத்தரகர்கள் மற்றும் விண்ணப்பதாரர்களிடமிருந்து, அதற்கான அனுமதி வழங்கும்போது லஞ்சமாக பணம் கேட்டு வாங்குவதாகவும், அப்படி வாங்கும் பணத்தை உதவி இயக்குநர் திருமதி.இரா.காவியம் அவரது காரில் வைத்திருந்து எடுத்துச்செல்வதாகவும் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் அமைத்துள்ள சிவகங்கை மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்திறகு சென்று, நான் சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் மற்றும் போலீஸ் பார்ட்டி ஆகியோருடன் மேற்படி அலுவலகத்தில் மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை இணை திடீர் சோதனை மேற்கொண்டேன். மேற்படி சோதனையின்போது சிவகங்கை மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்தில் உதவி இயக்குநர், துணை இயக்குநர் பொறுப்பு, திருமதி.இரா.காவியம் மற்றும் 19 அலுவலர்கள் ஆஜரில் இருந்தார்கள். அந்த அலுவலகத்தில் இருந்த உதவி இயக்குநர், பொறுப்பு துணை இயக்குநர் திருமதி.இரா.காவியம் என்பவரது இருக்கையைச் சோதனை செய்தபோது அவரது கைப்பையில் உள்ள பர்சில் ரூ.488/– பணம் இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்க செலவுக்காக வைத்திருக்கக்கூடிய சொந்தப்பணம் என்று கூறியதால் அவரிடம் திரும்பி ஒப்படைக்கப்பட்டது. அவருக்கு பின்புறம் உள்ள கபோர்டில் எழுதப்படாத காக்கி நிற கவரில் ரூ.800/– பணம் இருந்தது. அதுகுறித்து அவரிடம் கேட்க சரியான பதில் எதுவும் கூறவில்லை. அவர் அலுவலகத்திற்கு வந்த, அந்த அலுவலகத்தின் முன்புறம் நிறுத்தப்பட்டிருந்த அவரது அண்ணன் திரு.நிறைவு என்பவருக்கு சொந்தமான வெள்ளை நிற Honda City TN59 CB 1411 என்ற வாகனத்தை சோதனை செய்தபோது வாகனத்தில் உள்ளே வண்டியின் கியர் ராட் அருகில் உள்ள பாக்சில் 500 ரூபாய் நோட்டுக்கள் 10 மொத்தம் ரூ.5000/–ம் 2000 ரூபாய் நோட்டுக்கள் 2 மொத்தம் ரூ.4000/–ம் ஆக மொத்தம் ரூ.9000/–ம் காருக்குள் இருந்த உதவி இயக்குநர் திருமதி.இரா.காவியம் அவர்களின் கைப்பையில் நடுச்சிப்பினுள் 30 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் மொத்தம் ரூ.15000/–ம் Dashboard ல் இருந்த பர்சில் ரூ.2020/– ஆக மொத்தம் ரூ.26,020/– இருந்தது. வண்டியில் இருந்த பணம் குறித்து உதவி இயக்குநர் திருமதி.இரா.காவியம் அவர்களிடம் கேட்டபோது சரியான முகாந்திரம் கூறவில்லை. எனவே சரியான விளக்கம் கூறாத மேற்படி பணம் மொத்தம் ரூ.26,820/– அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. அலுவலக வளாகத்தில் இருந்த Honda City TN59 CB 1411 வாகனத்தின் ஓட்டுநர் திரு.வேல்முருகன் என்பவரை விசாரிக்க, அவர் உதவி இயக்குநர் திருமதி.இரா.காவியம் அவர்களின் அண்ணன் நிறைவு என்பவரிடம் ஓட்டுநராக வேலை செய்து வருவதாகவும், மேற்படி Honda City Car அவருடைய அண்ணனுடைய கார் எனவும் தெரிவித்தார். காருக்குள் இருந்த பணம் பற்றி

அவரிடம் கேட்க தனக்கு எதுவும் தெரியாது என்றும், அது உதவி இயக்குநர் திருமதி.காவியா அம்மா வைத்திருக்கக்கூடிய பணம் என்றும் கூறினார். அவரை சோதனையிட அவரது இடது பக்க சட்டைப் பாக்கெட்டில் ரூ.1360/– இருந்தது. அந்த பணம் அவர் செலவுக்காக கொண்டு வந்த பணம் என்று கூறியதால் அந்த பணம் அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. வரைவாளர் நிலை III திரு.P.கற்பக விநாயகம், த/பெ.பேச்சியப்பன் என்பவரை சோதனையிட அவரது வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் இருந்த மணி பர்சில் ரூ.340/– இருந்தது. அது குறித்த கேட்ட அவரது செலவுக்காக வைத்திருந்த சொந்தப்பணம் என்று கூறியதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவரது இருக்கையின் மேஜையை சோதனை செய்தபோது அவரது இருக்கை மேஜையின் இடது பக்க ட்ராவில் எழுதப்படாத காக்கி நிற கவரில் 10 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் மொத்தம் ரூ.5000/– இருந்தது. அந்தப் பணம் ரூ.5000/– குறித்து அவரிடம் கேட்டபோது சரியான முகாந்திரம் கூறாததால் ரூ.5000/– அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. வரைவாளர் நிலை III திரு.கோபாலன், த/பெ.கணேசன் என்பவரை சோதனையிட, அவரது இடது பக்க சட்டை பாக்கெட்டில் இருந்து ஐநூறு ரூபாய் நோட்டுக்கள்–4 தனியாகவும், ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் – 3 தனியாகவும் 1 ஐம்பது ரூபாய் நோட்டு–1, இருபது ரூபாய் நோட்டு–1, பத்து ரூபாய் நோட்டு–1 மொத்தம் ரூ.80/– தனியாகவும் இருந்தது. வலது பக்க பின்புற பேண்ட் பாக்கெட்டில் ரூ.16ம் அவருக்கு அருகில் வைத்திருந்த அவரது கருப்பு நிற லேப்டாப் பேக்கினுல் இருந்த பர்சில் ரூ.600/– இருந்தது. அது குறித்து அவரிடம் கேட்க இடது பக்க சட்டைப்பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.80/– வலது பக்க பின்புற பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.16/– பர்சில் வைத்திருந்த ரூ.600/– ஆகியவை அவரது செலவுக்காக வைத்திருந்த சொந்தப்பணம் என்று கூறியதால் அந்த பணம் ரூ.696/– அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. அவரது சட்டையில் இடது பாக்கெட்டில் தனித்தனியாக இருந்த ரூ.3500/– பற்றி அவர் சரியான விளக்கம் எதுவும் கூறாததால் அவரிடமிருந்து அந்த பணம் கைப்பற்றப்பட்டது. அளவர்/ உதவி வரைவாளர் திரு.மு.மூக்குசாமி, த/பெ.முத்துராமலிங்கம் என்பவரை சோதனையிட, அவரது இடது பக்க பேண்ட் பாக்கெட்டில் இருந்த மணி பர்சில் ரூ.3115/– இருந்தது. இதில் ரூ.2000/– மற்றும் 2 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் தனித்தனியாக சுருட்டப்பட்ட நிலையில் காணப்பட்டது. மேற்படி பணம் ரூ.3115/– பற்றி அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் செலவுக்காக கொண்டு வந்த பணம் ரூ.115/– என தெரிவித்தார். எனவே, ரூ.115/– அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மீதமுள்ள பணம் ரூ.3000/– பற்றி சரியான முகாந்திரம் கூறாததால் அவரிடமிருந்து ரூ.3000/– கைப்பற்றப்பட்டது. திட்ட உதவியாளர் திருமதி.R.ராணி, த/பெ.ரங்கசாமி, க/பெ.G.V.ராஜீ என்பவரை சோதனையிட, அவரது மணி பர்சில் இருந்து ரூ.350/– இருந்தது. மேற்படி பணம் ரூ.350/– பற்றி அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் செலவுக்காக கொண்டு வந்த பணம் என்று கூறியதால் அவரிடம் அந்த பணம் திருப்பி கொடுக்கப்பட்டது. அவருக்கு பின்புறம் உள்ள ஜன்னல் அருகே உள்ள டேபிளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த கோப்புகளுக்கு இடையில் ரூ.370/– இருந்தது. அது குறித்து அவரிடம் கேட்டபோது அது பற்றி அவருக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்தார். அங்கிருந்த மற்ற அலுவலர்களிடம் கேட்டபோது அவர்களுக்கும் அதுகுறித்து தெரியாது என்று

கூறியதால் அந்த பணம் ரூ.370/– கைப்பற்றப்பட்டது. கண்காணிப்பாளர் திரு.R.விஜயவீரன், த/பெ.ஸ்ரீராமராஜ் என்பவரை சோதனையிட, அவரது பேண்டின் வலது பக்க பாக்கெட்டில் வைத்திருந்த பர்சில் ரூ.1391/– இருந்தது. மேலும் அவரது சட்டையின் இடது பக்க பாக்கெட்டில் ரூ.1000/– இருந்தது. பர்சில் இருந்த பணம் ரூ.1391/– அவரது செலவுக்காக வைத்திருக்கக்கூடிய சொந்தப்பணம் என்று கூறியதால் அந்த பணம் அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. சட்டையின் இடது பக்க பாக்கெட்டில் இருந்த ரூ.1000/– பற்றி விளக்கம் எதுவும் கூறாததால் அந்த பணம் ரூ.1000/– கைப்பற்றப்பட்டது. சர்வேயர் திருமதி.A.மலர்க்கொடி, க/பெ.ஆவுடையப்பன் என்பவரை சோதனையிட, அவரது கைப்பையில் ரூபாய் இரண்டாயிரம் நோட்டு ஒன்றும், நூறு ரூபாய் நோட்டு இரண்டும் அதனுடன் இருந்த பர்சில் ரூ.65/– மட்டும் தனியாகவும் இருந்தது. அதுகுறித்து அவரிடம் விளக்கம் கேட்க பர்சில் இருந்த பணம் ரூ.65/– அவரது செலவுக்கான சொந்தப் பணம் என்று கூறியதால் அது அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. தனித்தனியாக மடித்து வைக்கப்பட்டிருந்த ரூ.2200/– பற்றி சரியான விளக்கம் கூறாததால் அந்த பணம் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. அலுவலக உதவியாளர் திருமதி.அருணாதேவி, த/பெ.வெங்கடாசலம், க/பெ.R.சங்கர் என்பவரை சோதனையிட, அவரது மணி பர்சில் ரூ.180/– மட்டும் தனியாக மடித்த நிலையிலும், ஐநூறு ரூபாய் நோட்டு–1, இருநூறு ரூபாய் நோட்டு–1, நூறு ரூபாய் நோட்டு–7 தனித்தனியாக சுருட்டி திணித்த நிலையில் இருந்தது. அதில் ரூ.180/– அவரது செலவுக்காக வைத்திருந்த சொந்த பணம் என்று கூறியதால் அந்த பணத்தை அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. மீதமுள்ள தனித்தனியாக சுருட்டிய நிலையில் திணிக்கப்பட்டிருந்த பணம் ரூ.1400/– பற்றி சரியான விளக்கம் எதுவும் கூறாததால் அந்த பணம் ரூ.1400/– அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. தனியர் திருமதி.கார்த்திகைராணி, க/பெ.காட்டுராஜா, கதவு எண்.36, பகவத்சிங் நகர், சிவகங்கை என்பவர் அலுவலகத்தின் கணிணி அறையில் இருந்தார். அவரை பற்றி விசாரிக்க அவர் திருமதி.காவியம் AD அவர்கள் சொன்னதன்பேரில் ஜீன் மாதம் 2018ம் ஆண்டு முதல் தற்காலிக தட்டச்சராக பணிபுரிந்து வருவதாகவும், மாதம் ரூ.5000/– சம்பளமாக AD திருமதி.காவியம் கொடுப்பதாகவும் தெரிவித்தார். அவரை சோதனையிட அவரது கைப்பையில் ரூ.40/–ம், கைப்பையினுள் இருந்த மணி பர்சில் ரூ.7ம் ஆக மொத்தம் ரூ.47/– இருந்தது. அது பற்றி அவரிடம் விளக்கம் கேட்டபோது செலவுக்காக கொண்டு வந்த பணம் என தெரிவித்ததால் அந்த பணம் ரூ.47/– அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. தனியர் திரு.சுரேஸ்குமார், த/பெ.வைரவன், கதவு எண்.381, N.வலசை, செய்களத்தூர் அஞ்சல், மானாமதுரை தாலுகா, சிவகங்கை மாவட்டம் என்பவர் அலுவலகத்தின் கணிணி அறையில் இருந்தார். அவரை பற்றி விசாரிக்க அவர் திருமதி.காவியம் AD அவர்கள் சொன்னதன்பேரில் கடந்த 6 மாதமாக தற்காலிக தட்டச்சராக பணிபுரிந்து வருவதாகவும், மாதம் ரூ.5000/– சம்பளமாக AD திருமதி.காவியம் கொடுப்பதாகவும் தெரிவித்தார். அவரை சோதனையிட அவரது வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் ரூ.500/– இருந்தது. அதுகுறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது செலவுக்காக கொண்டு வந்த பணம் என தெரிவித்ததால் அந்த பணம் அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது.

திரு.மலைராஜன், த/பெ.கருப்பண சேர்வை என்பவர் அலுவலகத்திற்குள் இருந்தார். அவரை பற்றி விசாரிக்க அவர் அதே அலுவலகத்தில் அதற்கு முன்பு பதிவறை எழுத்தராக பணிபுரிந்து 31.05.2018ல் பணியிலிருந்து ஓய்வு பெற்றதாகவும், ஓய்வு பெற்ற பிறகும், திருமதி.இரா.காவியம் AD அவர்கள் சொன்னதன்பேரில் தொடர்ந்து பதிவறை எழுத்தராக பணிபுரிந்து வருவதாகவும், அதற்கு மாதந்தோறும் ரூ.5000/- சம்பளமாக உதவி இயக்குநர் திருமதி.இரா.காவியம் அவர்கள் கொடுத்து வருவதாகவும் தெரிவித்தார். அவரை சோதனையிட, அவரது இடது பக்க சட்டைப் பாக்கெட்டில் ரூ.100/- இருந்தது. அதுகுறித்த அவரிடம் விளக்கம் கேட்க அவரது செலவுக்காக கொண்டுவந்த சொந்த பணம் என்று கூறியதால் அந்த பணம் அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது அலுவலகத்தின் முன் வரண்டாவில் நின்று கொண்டிருந்த 18 தனி நபர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும் இந்த திடீர் சோதனையின்போது அலுவலகத்தின் 2019ம் ஆண்டிற்கான பணியாளர் வருகைப்பதிவேடு, பணியாளர் நகர்தல் பதிவேடு ஆகியவற்றை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் இணைச்சோதனையில் மொத்தம் ரூ.43,290/- கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் ஆய்வு அறிக்கை குறிப்புகள் 19.02.2019ம் தேதி 20.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இணை திடீர் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், சரியாக கணக்கு சொல்ல இயலாத பணம் மொத்தம் ரூபாய் 43,290/-, பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள், இணை திடீர் சோதனை சம்பந்தமான எனது நடவடிக்கை குறிப்பு ஆகியவற்றை தங்களிடம் கடந்த 20.02.2019 அன்று ஒப்படைத்துள்ளேன். இதுசம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (Sd) G.செந்தில்வேலு; 28/06/2019, துணை ஆய்வுக்குழு அலுவலர், சிவகங்கை மாவட்டம். Submitted, Received this report along with enclosures and I registered a case in Sivagangai V&AC Cr.No.1/2019 for offence u/s 102 Cr.P.C r/w 7 of Prevention of Corruption Act (Amendment Act) 2018 on 28.06.2019 at 14.00 hrs as per the instructions of DVAC. signed S.Unnikrishnan, DSP, V&AC, Ramanathapuram, i/c Sivagangai 28/6/19.

The original F.I.R is submitted to the Hon'ble Chief Judicial Magistrate / Special Judge, Special Court for trial cases of the Prevention of Corruption Act, Sivagangai and the copies are submitted to the concerned officers.

28/6/19

DEPUTY SUPERINTENDENT OF POLICE
VIGILANCE & ANTI- CORRUPTION
i/c SIVAGANGAI.